செய்தித் தாளாகப் பதிவு பெற்றது
வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.
பிரதி விலை: சதம் 15
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரணஞு தை மீ உஉஉ வெள்ளிக்கிழமை (5-2-1971) [இல-சச

## சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜமூர்த்தி சிவகாமசுந்தரி அம்பாளுக்கு

# சபைபோரில் அபிடேகம்

### சிதம்பரம் புண்ணியநாச்சி மட தரும உபயம்

– சிதம்பரம்

உ
ஸ்ரீ நடராஜமூர்த்தி துணை

உயர்திரு. ஐயா அவர்களுக்கு,

து. திருஞானசம்பந்தக் குருக்கள் எழுதிக்கொண்டது.

நலம். நலமறிய அவா, தாங்கள் தந்தி வந்து சேர்ந்தது அதன்படி நம் பசுபதி தீக்ஷிதர் அவரிடம் ரூ 50/— கொடுத்து வழக்கம்போல் ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்திக்கும், சிவகாமசுந்தரி அம்பாளுக்கும், ஸ்ரீ மூலநாதர், உமய பார்வதிக்கும் சைவ பரிபாலனசபை மூல நக்ஷத்திரம் என்று சொல்லி, சங்கற்பம் செய்து வழக்கம்போல் அபிஷேக பூசைகளை நானும் கூட இருந்து செய்வித்தேன், இத்துடன் அபிஷேக விபூதி பிரசாதமும் அனுப்பி இருக்கிறேன். திருவாதிரை யாத்திரைக்காக இரண்டு குடும்பத்தினர்கள் வந்து தங்கி இருந்தார்கள். மடத்து புண்ணிய நாச்சி நித்திய கட்டளை சிறப்பாக நடந்து வருகிறது. அதையும் அடிக்கடி கவனித்து வருகிறேன்.

தங்களன்புள்ள,

23-1-71. து திருஞானசம்பந்தக் குருக்கள்,

[ சிதம்பரம் புண்ணியநாச்சி மட தரும உபய அபிடேகம் சம்பந்தமாக சைவ பரிபாலன சபையினது சிதம்பரம் புண்ணியநாச்சி மடப் பார்வையாளர் ஸ்ரீமத். து: திருஞானசம்பந்தக் குருக்கள் ஷ சபையினது காரியதரிசிக்கு எழுதிய கடிதம். ]

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஒருவனு யுலகேத்த நின்றநாளோ
வோருருவே மூவுருவ
மான நாளோ
கருவனுய்க் காலனைமுன்
காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால்
விழித்த நாளோ
மருவனுய் மண்ணும்விண்ணுந்
தெரித்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர்
மாதோர் பாகம்
திருவினுள் சேர்வதற்கு
முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக்
கொண்ட நாளே.
திருச்சிற்றம்பலம்
– திருநாவுக்கரசசுவாமிகள்.

### ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்

ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரது திருக்கேதீச்சர திருவாசக மடத்தில் 23–2–71 செவ்வாய்க்கிழமை சிவராத்திரி விழா வழமைபோல நடைபெறும். புராண படனம், கூட்டு வழிபாடு, திருமுறையோதல், மகேசுர பூசை முதலிய சற்கருமங்கள் இடம்பெறும்.

### திருவிடை மருதூரில்

## திருமுறைக்கருத்தரங்கம்

### ஈழத்திலிருந்து இருவருக்கு அழைப்பு

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடை மருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி திருக்கோவிலின் சார்பில் திருமுறைக் கருத்தரங்க விழா இம்மாதம், 12, 13, 14ம் திகதிகளில் திருவிடைமருதூரில் நடக்க ஏற்பாடாகியுள்ளது.

இக் கருத்தரங்கில், பேராசிரியர் தே. பொ. மீனாட்சி சுந்தரனர், திரு கே எஸ் நரசிம்மன் (ஆணையாளர் இந்துசமய அறநிலை ஆட்சித்துறை, சென்னை) திரு. சோ சிங்காரவேலன், பெருஞ்சோற் கொண்டல் திரு. பா... கண்ணப்ப முதலியார், சித்தாந்த கலைச்செல்வர் திரு க. வச்சிரவேலு முதலியார், காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன முதல்வர் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், டாக்டர் ந. சஞ்சீவி (சென்னைப் பல்கலைக் கழகம் முதலியோர் முதல் நாள் கருத்தரங்கில் கலந்து கொள்வார்கள்.

இரண்டாம் நாள் கருத்தரங்கு விழாவில் திரு. சா. கணேசன், எம் எல். சி., காரைக்குடி திரு க. வெள்ளைவாரணனர், பேராசிரியர் தமிழாராய்ச்சித்துறை அண்ணமலைப் பல்கலைக் கழகம்) தவத்திரு அழகரடிகள், டாக்டர் சுப. மாணிக்கம் (அண்ணமலைப் பல்கலைக் கழகம்) உரைவேந்தர் திரு. ஔவை துரைச்சாமிப் பிள்ளை மதுரை, டாக்டர் வ. ஆ தேவசேனபதி, திரு மு. அருணசலம், ஆசிரியர் "சித்தாந்தம்" திரு. ந ரா. முருக வேள் ஆசிரியர் 'திருக்கோவில்' சென்னை, முதலியோர் பங்கு பற்றுவார்கள்.

வளர்ச்சி 2-ம் பக்கம்

# தாயுமான சுவாமிகளின் திருநாளை எங்குங் கொண்டாடுக

## சுவாமிகளது முன்னேரும் ஈழத்தவர்களின் தொடர்பும்

### ஸ்ரீமத் தாயுமானசுவாமிகள் குருபூசை தைப்பூச புண்ணியதினமாகிய 9-2-71

[ அறிஞர், திரு. மா. பீதாம்பரன் அவர்கள், திருமலை ]

தமிழ் கூறு நல்லுலகத்தில் வேதாந்த சித்தாந்த சமரசத்தினை தோத்திர வாயிலாக விளக்கியருளிய ஸ்ரீமத் தாயுமானசுவாமிகளின் குருபூசைத் தினம் நிகழும் தை மாசத் தைப் பூசத்தில் வருகின்றது.

சமய குரவர் சந்தானகுரவர் எண்மரின் குருபூசையினை நடத்துவதுபோல, ஸ்ரீமத் தாயுமான சுவாமிகளின்குருபூசையினையும் சைவ மக்களாகிய நாம் பக்தியுடன்நடத்துதல்சிறந்ததாகும்.

வேதோபநிடதசாரமே தேவார திருவாசகம் என்பர். சிவாகம ஞான காண்டப் பொருளே சிவஞானபோதம், சித்தியார் என்பர். இவற்றைக் குருமூலமாக நன்காராய்ந்து அநுபூதிமானுய் விளங்கியவர்களுள் ஒருவர் ஸ்ரீமத் தாயுமானசுவாமிகள் ஆவர்.

"தாயுமான சுவாமிகள் கி பி. 1661-க்கு ஒத்த சாலிவாகன சகாப்தம் 1583 இல் சுபகிருது ஆண்டு தைமாதம் திங்கட்கிழமைவிசாகத்தன்று மாலை முத்தியடைந்த காலமாகும்" "....... இராமநாதபுரத்து இலட்சுமிபுரத்திலுள்ள சுவாமிகளது சமாதி பீடத்தில் (கி. பி. 1661) ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ஆம் திகதி தாயுமானவர் முத்தியடைந்த காலம என்று வரையப்பட்டுள்ளது ஆகவே சுவாமிகள் கி. பி 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் விளங்கியவர் என்பதிற் சிறிதும் ஐயமில்லை" (ஸ்ரீ காசி மடப் பதிப்பு – 1954 முகவுரை) எவ்வாருயினும், கி. பி. 1642க்கு சா. வா. 1584ல் தைமீ 28௨ விசாகத்தன்று என்பர். திரு. கா. சுப்பிரமணியபிள்ளை பிறர் பலவாறு கூறுவர். தாயுமானசுவாமிகள் வரலாறு, பாடற்பதிப்புக்களின் முகவு

(வளர்ச்சி 2–ஆம் பக்கம்)

## மதுவரக்கன் மாண்டான்

இந்துசாதனம் ஆசிரியருக்கு,

கடந்த ஜனவரி மாதம் 25-ம் திகதி கோட்டாஞ்சேனைப் பகுதியிலுள்ள கள்ளுத்தவறணைகளை மூடுவதற்காகப் பொதுமக்களின் வாக்களிப்பு நடைபெற்றது. இதில் தவறணைகளை மூடவேண்டுமென்ற கட்சியே வென்றது எனவே, அப்பகுதியில் மதுவரக்கன் மாண்டனன் என்றே சொல்லலாம்

மதுவரக்கனின் பிடியிலகப்பட்டோர் மதியிழந்து, மானமிழந்து அத்துடன் பொருளுமிழந்து இன்னேரன்ன பல இன்னல்கள் அனுபவிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்து, பௌத்த, இஸ்லாம் முதலாகிய மதங்கள் மதுபானம் அருந்துதல் பாவச்செயல் என்று விதித்துள்ளன. இந்துக்கள் அதனை பஞ்சமாபாதகளுள் ஒன்றகக் கருதுகின்றனர்.

திருவள்ளுவர், 'உண்ணற்க கள்ளை' என்கின்றர். மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும், கயக்கறு மாக்கள் கடிந்தனர்" என்றியம்புகின்றது மணிமேகலை. செந்நெறியை நினையாதார் கடைப்பிடிக்கும் வழிகளுள் கள்ளுண்ணலையும் ஒன்றக நவில்கின்றர் 'வெண்பாவிற் புகழேந்தி'. இவ்விருபதாம் நூற்றண்டில் மதுவொழிப்புக்கான முயற்சிகளுள் ஈடுபட்டோருள் காந்திஜி, ராஜாஜிபோன்றோர் முக்கியமானவர்கள். உலகந் தோன்றிய காலந்தொடக்கம் மக்களைக் கொடுமைப் படுத்தும் மதுவாக்கனை மாளச் செய்வதற்குப் பல பெரியார்கள் பாடுபட்டுள்ளனர்,

கோட்டாஞ்சேனை மக்கள் வாக்களிப்பு வாயிலாக மதுவரக்கனை மாளச் செய்தது மிகவும் வரவேற்கத்தக்கது. இதனல், அவர்கள் தூய வாழ்வு வாழத் தொடங்கி விட்டனர். இச் செயலுக்குத் துணைபுரிந்தவர்களை எவ்வளவு பாராட்டினுலும் தகும். ஏனைய இடங்களிலுள்ள மதுத் தவறணைகளும் கோட்டாஞ்சேனையைப் பின்பற்றுமா?

சு பஞ்சாட்சர ஐயர்,
யாழ்ப்பாணம். 1-2-71

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்கு
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ஷூ தைமீ உ௨-௨ வெள்ளிக்கிழமை [1971]

## சைவ சமயக் குருமார் வளம்பெருகுதல் வேண்டும்

இக்காலத்தில் சைவாலயங்கள் பலவற்றில் பூசகர்களாகக் கடமை புரியத் தகுதியுள்ள குருக்கள்மாரைப் பெறுதல் பகீரதப்பிரயத்தனமாயிருக்கின்றது. ஓராலயத்தில் தலைமைப் பூசகராகவுள்ள குருக்கள் சிவப்பிராமண குலத்தைச் சேர்ந்தவராகவும் விசேட நிருவாண தீக்ஷைப் பேறுடன் ஆசாரியாபிஷேகம் பெற்றவராகவுமிருத்தல் வேண்டும். இவ்விலக்கணங்களில்லாத பிராமணர் கோயிற் பூசை புரிதலினால் நாட்டுக்கு நன்மையுண்டாகாது. அதற்குப் பிரமாணம்;

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்அன்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே". —திருமந்திரம்

இக்காலம் கோவிலதிகாரிகள் அவர்களுக்கு வழங்கும் சன்மானம் வாழ்க்கைச் செலவுக்குப் போதியதாகவில்லை. அவர்கள் கண்ணியமான வீடுகளில் வசிக்க வசதியில்லை. ஆன்மார்த்தம் பரார்த்தம் சம்பந்தமான பூசைத் திரவியங்களைப் பெறவும் கஷ்டப்படுகின்றார்கள். குடும்பத்தைப் பாதுகாப்பதற்கும் வழியற்றவராகவுள்ளார்கள். சைவ மக்களும் அவர்களுக்குரிய கௌரவத்தை வழங்குவதில்லை. இக் காரணங்களினால் குருமரபைச் சேர்ந்த இளைஞர்கள் குருத்துவக் கடமைகளில் ஈடுபட முன்வருகின்றார்களில்லை. அரசாங்கவுத்தியோகம், வியாபாரம், கைத்தொழில் போன்ற வேறு துறைகளில் சேர்ந்து தங்கள் சீவியத்துக்கு உழைக்க விரும்புகின்றார்கள். அவர்களைத் தங்கள் பரம்பரைத் தொழிலீடுபடச் செய்தற்குக் கோவிலதிகாரிகள் இக்கால வாழ்க்கைச் செலவைக் கவனித்து திருப்தியான சன்மானம் வழங்குதல் வேண்டும். சைவ மக்களும் அவர்களுக்குரிய கௌரவத்தையளித்தல் வேண்டும். அவர்கள் இறைபணி புரிகின்றவர்கள். மக்கள் அவர்களைத் தெய்வமாக மதிக்காவிட்டால் ஆலயங்களிலுள்ள மூர்த்தியினுடைய அருளை அவர்கள் பெறுதல் இயலாது. அவர்களுடைய மந்திரக் கிரியாபாவனைகளினால் தான் ஆலயங்களில் பிரதிஷ்டை பெற்றிருக்கின்ற மூர்த்திகளில் இறைவன் சாந்நித்தியமாயிருக்கின்றனர். சைவ சாத்திரங்கள் அவர்களைப் பூசுரர் என அழைக்கின்றது. பூசுரர் என்பதன் பொருள் பூமியில் நடமாடுந்தெய்வங்கள்.

அரசாங்க உத்தியோகத்திலிருந்து இளைப்பாறும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் உதவிப் பணம் போல் குருமார்களுக்கும் வயோதிப காலத்தில் உதவிப் பணம் வழங்குவதற்குரிய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். குரு வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் வேதாகமம், சைவத் தெய்வத் திருமுறைகள். புராணேதிகாசங்கள் முதலியவற்றைக் கற்பதற்கும், ஆலய சேவை, கிரியா முறைப் பயிற்சியைப் பெறுதற்கும் யாழ்ப்பாணத்தில் ஒரு குருக்கள்மார் பயிற்சிக் கழகத்தை நிறுவுதல் வேண்டும். இப்பணி நமது நாட்டில் சைவ சமயத்தை ஓப்புவதற்கு உறு துணையாகவிருக்கும். யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல புராதன ஆலயங்களினது பரிபாலகர்களும் சைவ சமயச் சபைகளும் இதற்குரிய ஒழுங்குகளைக் கவனித்தல் முக்கியமான கடமையாகும். சைவசமயக் குருமாருடைய வாழ்க்கைத் தரமும் கல்வியும் உயர்ந்தாற்றான் சைவ சமயம உயரும்.

## தாயுமான சுவாமிகள்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

ரைகளிலும், ஆங்கில மொழி பெயர்ப்பு முகவுரையிலும், தனிப்பட்ட ஆங்கில, தமிழ் வரலாற்று நூல்களிலும் விரிவாகவுள்ளன.

தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் தாயுமானவரைக் குறித்து அரிய பாடல் பாடியுள்ளார். அன்றியும் அவர் 'கல்வி முறை' பற்றி எழுதிய கட்டுரை ஒன்றில், தாயுமானவரைப் பற்றி எழுதிய கட்டுரை ஒன்றில், தாயுமானவரைப் பற்றி எழுதிய குறிப்புகளுள் ஒரு சிலவற்றை எடுத்தருகின்றேன்.

'நம் காலேஜ் மாணாக்கர்களுக்குள்ளே தாயுமானவர், சங்கரர் முதலியவர்களின் சரித்திரத்தை உணராதவர்கள் எத்தனை ஆயிரமபேரோ இருக்கின்றார்களல்லவா......? தாயுமானவரைப் போன்ற ஞானி ஒருவர் இங்கிலாந்திலே இருந்திருப்பாராஞல் அவரைப் பற்றி அறியாத பாடசாலை மாணாக்கன் எந்த இடத்திலும் இருக்க மாட்டான். அவரது இனிய நிரம்பிய அமிருத கவிகளைக் கற்றேனும், அவரது சரித்திரம் முதலியவற்றைக் கேட்டேனும், அறியாத ஆயிரக் கணக்கான மூடர்கள் தம்மைக் கல்விமான்கள் என்றும், பட்டதாரிகள் என்றும் கூறிக்கொண்டு இந் நாட்டிலே திரிகின்றார்கள்,... நமது கடமை யாதென்றால் நம் பாடசாலைகளிலே பரத கண்டத்தின் புராதன மகாத்மாக்களைப் பற்றி நல்ல பயிற்சிகொடுத்து, இளைஞர்களுக்குத் தேசபக்தி, சௌகரியம் ஒழுக்கம் முதலியன ஏற்படச்செய்ய வேண்டும். (பாரதியார்) தாயுமானசுவாமிகவின் குரு ஸ்ரீமத் மௌன குரு (ஸ்ரீமத் மௌன தம்பிரான் சுவாமிகள் – சாரமா முனிவர் மடம், திருச்சிராப்பள்ளி - கி. பி. 1594-1658)

ஸ்ரீமத் தாயுமான சுவாமிகளின் தந்தையார் வேதாரணியம் கேடிலியப்பபிள்ளை என்பவர். இவரின் மூன்னோர் யாழ்ப்பாணத்து வரணியினைச் சேர்ந்தவர் என்று, தாம் வேதாரணியத்திலிருந்த பெரியார் ஒருவர் சொல்லக் கேட்டதாக, ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை B A அவர்களின் மகனார், பேராசிரியர் அழகசுந்தரனார் (என் ஆசிரியகளுள் ஒருவர்) எனக்குச் சொன்னார்கள். அன்றியும், திரு. கா சுப்பிரமணியபிள்ளை M. A எழுதிய "தாயுமானசுவாமிகள்" என்னும் நூலில் "வரணியென்பது யாழ்ப்பாணத்திலுள்ளது. ஆண்டுள்ள ஆதினத்தார்க்கு மறைசையிலும் மடம் உண்டு. அம் மடத்திலிருந்தோர் அந்நாளில், மறைசைக்கோயில் மேற்பார்வையாளராயிருந்தார்கள் என்று தெரிகிறது'' (பக்கம் 20) என்னும் குறிப்புக் காணப்படுகிறது.

தாயுமான சுவாமிகளின் மாணாக்கருள் ஒருவராகிய ஸ்ரீ அருளையர் பாடிய 'அருள் வாக்கிய அகவல்' சுவாமிகளின் சமரசன்மார்க்க நெறியினையும் அநுபூதித் திறத்தினையும் இனிது விளக்குகின்றது. அவ்வகவலின் அடிகளுள்,

"பேத அபேத
பேதா பேத
போதம் இதுவெனப்
புகன்றிடும் புண்ணியன்"

என்பது போற்றத்தக்கது.

—:—

## வேலணை, ஸ்ரீ கந்தப்பிள்ளை தினம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடைய சீடனும், தமிழ்ப் புலமையும், சைவ சித்தாந்த அறிவும் நிறைந்தவரும், வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலைத் தாபகருமாகிய வேலணை ஸ்ரீ வி. கந்தப்பிள்ளையவர்கள் தினம், வேலணைத் திருஞானசம்பந்தர் மடாலய பரிபாலன சபையாரால் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கொண்டாடப்பெற்றது. காணவாயாதீனம் ஸ்ரீமத். கை. திருஞானசம்பந்தக்குருக்கள் அவர்கள் சிவபூசை புரிந்தபின்பு மாகேசுர பூசை நடைபெற்றது. பிள்ளைகளுக்குப் பிரசாதம் வழங்கப்பெற்ற பின் வித்தியாசாலை மண்டபத்தில் ஞாபகார்த்தக் கூட்டம் சருக்கள் அவர்கள் தலைமையில் நடந்தது.

"பெரியார் தினங்களைக் கொண்டாடுதல் சிறுவர்கள் அவர்களுடைய பண்புகளைப் பின்பற்றி வாழ உறுதுணையாகவிருக்கும். ஸ்ரீமான். கந்தப்பிள்ளை வேலணையிலும் மற்றைய தீவுகளிலும் சைவசமயவுண்மைகளைப் பரப்பவும் தமிழ்மொழியைவிருத்தி செய்யவும் உறுதுணையாயிருந்தனர். சைவ மக்கள் சைவசாதனங்களைப் பேணுதல் வேண்டும். கொலை, களவு, கள், காமம், சூது முதலிய பாவங்களைத் தவிர்த்தல் வேண்டும். நால்வர் காட்டிய நெறியைச் சைவமக்கள்கடைப் பிடித்தொழுகினால் துன்பமொன்றுமில்லை" எனத் தலைவர் கூறினார்.

பண்டிதர் சோ. தியாகராசா அவர்கள் "சைவப்பிரகாச வித்தியாசாலையையும், மடாலயத்தையும் ஒரே காலத்தில் ஸ்ரீமத். கந்தப்பிள்ளை உபாத்தியாயர் நிறுவியதன் நோக்கம் நாட்டில் குரு லிங்க சங்கம பக்திபெருகுதற் பொருட்டேயாகும். சமயம் பேச்சளவில் நின்றுவிடக்கூடாது. மக்கள் சமயசாத்திரங்கள் கூறுகின்ற விதிகளின்படி ஒழுகுதல் வேண்டும். வேலணையில் சைவப்பயிரை வளர்த்த பெருமை ஸ்ரீமத் கந்தப்பிள்ளை உபாத்தியாருக்கேயுரியது: திருஞானசம்பந்தர் மடாலயத்துச்கு ஒருநிரந்தரமான கட்டடம் அமைத்தல் வேண்டும். அடுத்த ஆண்டு தைமாதம் சுக்கில பக்ஷம் ஏகாதசியிலன்று ஸ்ரீமத். கந்தப்பிள்ளை அவர்கள் தினத்தை இவ் வருடத்திலும் பார்க்கச் சிறப்பாக நடத்துவதற்குரிய ஒழுங்குகளைச் செய்துவைப்போம்" எனக் கூறினர்.

திரு. மு. மயில்வாகனம் அவர்கள் யாவருக்கும் நன்றி கூறினர்.

——

## திருவிடைமருதூரில் திருமுறைக்கருத்தரங்கு

1-ஆம் பககத்தின் வளர்ச்சி

ஈழநாட்டிலிருந்து திருமதி. ரத்ன நவரத்தினம் அவர்களும், திரு. அருள் தியாகராசா அவர்களும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்வர்.

மூன்றாம் நாள் விழாவில்: திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை (அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்) திரு. அ. ச. ஞானசம்பந்தம்' பேராசிரியர் வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார்; சித்தாந்த பண்டித வித்துவான் திரு ப. இராமநாதபிள்ளை (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்) தவத்திரு. சபாபதி சுவாமிகள், (தலைவர், மௌன சுவாமிகள் மடம், சிதம்பரம்) திரு. ஜி. கல்யாணம். திரு கே. எம். வேங்கட்ராமையா. முதல்வர் சேர்ந்த தமிழ்க் கல்லூரி. திருப்பனந்தாள் முதலியோர் பங்குபற்றுவார்கள்

(நமது நிருபர்)

## திரு ஜி. ஜி பொன்னம்பலம் அவர்கள்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலம் வேலூர் ஆஸ்பத்திரியில் வைத்தியபரிசோதனை முடித்துக்கொண்டு பங்களூரில் ஆறுதலடைந்து கொண்டிருக்கிறார். தாய்நாடு திரும்பியபின் இலங்கை பிரதமமந்திரியவர்களுடன் தமிழர் நிலைபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

—0—

## மகா கும்பாபிஷேகம்

திருநெல்வேலி, அரசடி சிவகாமியம்பாள் கோவில் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் 8-2-71 திங்கட்கிழமை காலை 6-59முதல் 7-47 வரையிலுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும். திருநெல்வேலி சிவஸ்ரீ நா சண்முகரத்தினக் குருக்கள் தலைமையில் மேற்படி வைபவம் நிகழும்.

## ஏழடுக்கு இராஜகோபுரம்

கொழும்பு. கொம்பெனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு ஏழடுக்கு இராஜ கோபுரமொன்றை அமைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. ஷ கோபுர அமைப்புக் குழுவுக்கு சினிமாஸ் லிமிட்டட் திரு. கே. குணரத்னம் அவர்கள் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கின்றனர் பாரம்பரிய கால சிறப்புகள் கோபுரத்திருப் பணியில் சேர்க்கப்படும். ஆரம்ப வேலை 7-2 71 காலை 6½ மணிக்கு மிகச்சிறப்பாகச் சைவாசாரப் படி தொடங்கப்பெறும்,

## தமிழர் நன்மையை ஆராய்தல்

7-2-71 ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறையில் தமிழ்த் தலைவர்களொற்றுமை மகாநாடொன்று கூடும். திரு. செ சுந்தரலிங்கம் (முன்னைநாள் பா. உ.) திரு. சி. அருளம்பலம் (பா. உ.) திரு. ஆ. தியாகராசா (பா. உ.) திரு. வி. ஆனந்தசங்கரி (பா உ) முதலியவர்கள் கலந்துகொள்வர். இம்மகாநாட்டை திரு. ஞானமூர்த்தியவர்கள் கூட்டுகின்றனர். முன்னைநாள் பா. உ, திரு அ. அமிர்தலிங்கத்துடன் மகாநாட்டைப்பாளர் பேச்சுவார்த்தை நிகழ்த்துகின்றனர்.

## பனம்பொருள் வியாபார வாய்ப்பு

வடபகுதியில் பனம் பொருள் வியாபார வாய்ப்பைப் பற்றி விசாரணை செய்வதற்கு பனம் பொருளுற்பத்திக் குழுவொன்று 11, 12-2-71 தேதிகளில் யாழ்ப்பாணம் கச்சேரியில் வேண்டிய விபரங்களைச் சேகரிக்க கூட்டங்களை நடத்தும். மேற்படி குழு ஆறுநாட்கள் யாழ்ப்பாணத்தில் பலபாகங்களில் விசாரணைகளை நடத்தும். சாட்சியமளிக்க விரும்பும் பொதுமக்கள் வடமாகாண அதிபருடன் தொடர்பு கொண்டு நேரங்களைக் குறித்துக்கொள்ளலாம்.

## போற்ற வேண்டும்!



பக்தர்: 'சமய வளர்ச்சி'க்காகப் பணிசெய்கிறோம்' என்று இன்று ...எல்லோரும்கூறுகின்றார்களே! ஏதும் பிரமாதமாக நடந்திருக்கிறதா? என்ன?

சித்தர்: "பிரமாதமோ என்னவோ, இன்று உலகம் போகிற போக்கைப் பார்த்தால், ஆறுதலடையஇடமில்லை! திருமுறைப் பயிற்சி வளரவும், சைவாசாரம் ஓங்கவும் சிலர் ஆற்றும் சிறந்த பணி போற்றத்தக்கது பாருங்க!

"நாயன்மார் – நாதன்"

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில் இல: 10726

காணவாய் வடக்கு ஆறுமுகம் தம்பையா தற்போது
மலேசியா தனது தத்துவகாரன்,
புலோலி கிழக்கு, சேனாதிராஜசேகரம் ஏகாம்பரநாதன்
எதிராக —வழக்காளி
சமரபாகுதேவன் குறிச்சி 1. கணபதி கந்தையன்
2. பெண் சரஸ்வதி
— எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கின் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனங்களை 1971ம் ஞு சித்திரை மாதம் 8ம் திகதி (8-4-71) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று சமரபாகுதேவன் குறிச்சியிறை "பூச்சிபூத்தான்" ஷ நி. பர. 18 ஆக நி. பர. 29 எல்லை கிழக்கு வயிரவன் கிட்டிணனுக்குரியவாதனம். வடக்கு தம்பன் கிட்டிணனுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு ரேட்டு இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலிற் சொரியலாய் நி. பர. 19இல் நாலிலொரு பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

2. ஷ இறை வண்ணாநிடல் மேற்கு நி. பர. 3¼ எல்லை கிழக்கு பின் சொல்லப்படும் 3ம் ஆதனம். வடக்கு சுப்பன் சின்னக்குட்டிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கும், தெற்கும் வேலன் பொடியனுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் மனைகள் வடலிகளடங்கலிற் சொரியலாய் எட்டிலொரு பங்கும்.

3. ஷ இறை வண்ணாநிடல் கிழக்கு நி. பர. 6¼ ஷ நி. பர. 2½ ஆக நி. பர. 8¾ எல்லை கிழக்கு மாணிக்கன் பெண் சிவப்பிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு சுப்பன் சின்னக்குட்டிக்கும் மறுபேருக்குமுடையவாதனம், மேற்கு மேற்குறித்த 2ம் ஆதனம். தெற்கு கந்தன் பெண் சீதேவிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், மனைகள் வடலிகளடங்கலிற் சொரியலாய் பதினாறில் மூன்று பங்கும்.

4. ஷ இறை வண்ணாநிடல் கிழக்கு நி. பர. 6¼ எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு கந்தன் கதிரவேலுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு மாணிக்கன் பெண் சிவப்பிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு கந்தன் பெண் சீதேவிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் மனைகள் வடலிகள் அடங்கலிற் சொரியலாய் முப்பத்திரண்டிலொரு பங்கும்.

| | | |
|---|---|---|
| தீரட்சித்தொகை: | ரூபா | 1 600-00 |
| ரூபா 800/- வட்டி 12% ஒரு வருஷத்துக்கு 10-12-69 விருந்து 25-8-70 வரைக்கும் | | 68-00 |
| ரூபா 1668/- வட்டி 5% ஒரு வருஷத்திற்கு 25-8-70 விருந்து 18-12-70 வரைக்கும் | | 25-.0 |
| | | 1,693-90 |
| கோட்டுச் செலவு | ... | 238-21 |
| முழுத்தொகை | ... | 1,932-11 |

R. S. இராமநாதன்
கொம்மிசனரும் விலமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்
Commissioner of Sa'e & Valuer
and Auctioneer

"உமாபதி"
தும்பளை, பருத்தித்துறை,
30-1-71
எம். 485 5—2—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. கார்த்திகேசு ஜெயரத்தினமும் பெண் 2. பத்மராணியும்
இருவரும் உருப்பிராய் — வழக்காளி.
வழ. இல: M B 10429 எதிராக
1. தம்பிப்பிள்ளை சுப்பிரமணியமும் பெண்
2. அன்னம்மா அல்லது சின்னம்மாவும்
இருவரும் உருப்பிராய் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 10429ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணியை 1971-ம் ஞு பங்குனிமீ 8-ம் திகதி (8-3-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 5953/-ம், 11-11-68 தொடக்கம் 25-7-69 வரைக்கும் ரூபாய் 4000/-க்கு 9வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 340-20 இதில் 25-3-70 இல் கொடுபட்ட ரூபாய் 4500/- செலவில் ரூபா 200/- கழிபடவேண்டியது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று உரும்பிராயில் இருக்கும் காணி 'கேசனுக வனசிலம்பிலனும்' நிலப்பரப்பு 12 (பரப்பு ரண்டு) பயிர்களும் பாக்கியத்திற்கு சொந்தமான காணியில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் கிணற்றுக்கருகில் நிற்கும் தென்னை மரங்களில் ஐந்தும் (5) மேற்சொல்லிய 12 பரப்பில் எல்லை கிழக்கு மயில்வாகனம் கைம்பெண் தங்கம்மாவின் ஆதனம், வடக்கு பாக்கியத்தினதும் மயில்வாகனம் கைம்பெண் தங்கம்மாவினதும், கந்தையா பெண் பொன்னம்மாவினதும் ஆதனங்கள், மேற்கு கையொழுங்கை. (ஆறுமுக ஆகலம்) பாக்கியத்தின் காணிக்கு போவதற்கும் இந்த காணிக்கு போவதற்கு வழிவாய்க்காலும் தெற்கு கந்தசாமி பெண் பொன்னம்மாவின் ஆதனமும், ஒழுங்கையும் இதடங்கலும் அதன் சொத்துரித்துக்களும்.

,வேல்பதி' S. சங்கரப்பிள்ளை J. P.
புத்தூர். 28-1-71 கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 481 5-2-71

## பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயா அவர்களுக்கு உதவுங்கள்

பண்டிதர் பிரம்மஸ்ரீ வ மு. இரத்தினேசுவர ஐயரவர்களுக்கு பின் வரும் அன்பர்கள் பணமுதவியுள்ளனரேன்பதைப் பண்டித மணியவர்கள் எமக்குத் தெரிவிக்கின்றனர்.

| | | ரூபா சதம். |
|---|---|---|
| 29-1-71 வரை சேர்ந்தது | | 35-00 |
| திரு. N மயில்வாகனம் | கந்தர்மடம் | 20-00 |
| திரு. வ செல்லப்பா | உடுவில் | 10-00 |
| திரு. சு. அம்பலவாணர் | சுன்னாகம் | 15-00 |
| திரு. M. K. துரையப்பா | உடுவில் | 10-00 |
| திரு. சி இ. சதாசிவம் | "அன்பகம்" புங்குடுதீவு | 10·00 |
| திரு. செ. சின்னத்துரை | ஏழாலை மேற்கு சுன்னாகம் | 10·00 |
| மல்லாகம் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் | | 10-00 |
| | மொத்தம், | 120-00 |

5-2-71 —பத்திராதிபர்,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தாமு சிதம்பரப்பிள்ளை கந்தையா, நல்லூர் —வழக்காளி
வழ: இல. M B 10515 எதிராக
செல்லையா நவரத்தினம், நல்லூர் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B 10515-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1971-ம் ஞு பங்குனிமீ 13ம் திகதி (13-3 71) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4723/-ம் 3.1-69 தொடக்கம் 2-3-70 வரைக்கும் ரூபாய் 3700/-க்கு 10% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 431 சதம் 39

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும், டிவிசனும்; நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'மன்மதராயன் வளவு பரவில இலா. 3, குளி 1, 1/4ம் கல்வீடு கிணறும் பயிர்களும் எல்லை கிழக்கு: முத்துமாரியம்மன் கோவிலின் ஆதனம். வடக்கு தாமு சிதம்பரப்பிள்ளை கந்தையா மேல் குறிக்கப்பட்ட வழக்காளியின் ஆதனம், மேற்கு: ஒழுங்கையும், அருணசலம் கைம்பெண் தங்கத்தினுடையதும் பங்காளர்களுடையதும், தியாகராசா பெண் கமலமுடையதும் ஆதனங்கள், தெற்கு: சண்முகராசாவுடையதும் கந்தையா பெண் மங்கையர்க்கரசியினுடையதும் ஆதனங்கள். இதடங்கலும் இக்காணிக்கு மேற்கெல்லைப்பக்கமாய் கோவில் ரேட்டுக்குப் போவதற்கு விடுபட்ட ஒழுங்கையின் போய் வரப் பாவிப்புரிமையும் பிற நீங்கலாக பதிவு இல: யாழ்ப்பாண டிஸ்திறிக் காணிக்கந்தோர் D. 324/43

107, பெரியதெரு, ஏ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
யாழ்ப்பாணம், வெந்திஸ் கொமிஷனரும் விலமதிப்பாளரும்
29—1—71 எம். 486 5-2-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 10970

1. தில்லையம்பலம் சங்கரப்பிள்ளையும்
2. பெண் தங்கலட்சுமியும் இருவரும் காரைநகர் தற்போது மலேசியாவில், அவர்களின் உரிமைக்காரரும், தத்துவக்காரரும் ஆகிய சண்முகம் பொன்னம்பலம் காரைநகர் கிழக்கு —வழக்காளி

எதிராக

விஞசித்தம்பி கைம்பெண் இராசம்மா, மாதா கோவிலடி, களபூமி, காரைநகர், காலஞ்சென்ற இராமநாதர் விஞசித்தம்பியின் உரிமைக்காரரும் தத்துவகாரரும். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 10970ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1971-ஆம் ஞு பங்குனி மாதம் 15-ம் திகதி [15-3-71] திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 6187-50ம், 22-7-69 தொடக்கம் 11-5-70 வரைக்கும் ரூபாய் 5400/-க்கு 7% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 587-80

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவுமேற்கு இறை 'தம்பன்' என்னும் காணி நி. பர. 10½ எல்லை கிழக்கு முருகேசு பெண் தெய்வானை வடக்கு ஆறுமுகம் பொன்னையாவும், அருணசலம் பெண் சரஸ்வதியும், நமசிவாயகம் நடராசாவின் உரிமைக்காரரும் மேற்கு சின்னத்தம்பி சோமசுந்தரம் தெற்கு ஆறுமுகம் சண்முகமும் ஆறுமுகம் பங்காளரும் இது அடங்கலும்.

நம் 35/2, கொழும்புத்துறை வீதி, இ. கனகரத்தினம்
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், கொமிஷனரும், விலமதிப்பாளரும்
(எம், 490 5-2 71)

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம். திருநெல்வேலி தெற்கு, 66/2 நாச்சிமார்கோவில் ரேட் தா. சி. குமாரசாமி அவர்களிடம் 1969ம் ஞு செப்ரெம்பர் (புரட்டாதி) மாதம் 1ம் திகதி (1—9—69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 1971ம் ஞு பெப்ரவரி (மாசி) மாதம் 28ம் திகதி (28—2—71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
"இராசகிரி" கொம்மிஷனரும் விலமதிப்பாளரும்
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். எம். 488 5, 12—2—71

### தாயுமான சுவாமிகள் திரு நாள்

தாயுமானசுவாமிகள் தினம் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் கோவிலில் 9-2-71 பூசத்தன்று இரவு 7 மணி தொடக்கம் நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக்கழகத்தின் ஆதரவில் கொண்டாடப்பெறும்.

## கூரை ஷீட்டுக்கள்

### உற்பத்தி செய்யலாம்

'பனை ஓலையிலிருந்தும் தென்னை ஓலையிலிருந்தும் நீண்டகாலம் பாவிக்கக்கூடியதான கூரைஷீட் உற்பத்தி செய்யலாம். தேங்காய்த் துருவலை அரைத்துக் கூட்டாக்கி கீடியபாவனைக்குப் பயன்படுத்தலாம். இவ்வாறே பனை தொடக்கம் பருத்தித்துறை வரையுள்ள பனை தென்னை மற்றும் கனி தருமரங்களைப் பயன்படுத்தி நாட்டின்பொருளாதாரத்தை முன்னேற்ற எமது இளைஞர்கள் முன்வர வேண்டும்.

சாவகச்சேரியில் மாணவர் மன்றத்தின் மாணவர்சேவா சங்கத்தை ஆரம்பித்து வைத்து தலைமை உரை நிகழ்த்தும் போது திரு வி. ஈ சண்முகம் இவ்வாறு குறிப்பிட்டார்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்
வழக்கு இல: M B 7753

தம்பிப்பிள்ளை குமாரசாமி பருத்தித்துறை ரேட், யாழ்ப்பாணம். (காலம் சென்ற தம்பிப்பிள்ளை சுப்பிரமணியத்தின் உரிமை ஆதனத்துக்கு சட்டப்படி நியமிக்கப் பட்டபிரதிநிதி வழக்கு இலக்கம் 1394 / T. யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் —வழக்காளி
எதிராக
நாகலிங்கம் அருளானந்தம்
அரியாலை யாழ்ப்பாணம்
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B- 7753-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1971-ஆம் ஞு பெப்ரவரி மாதம் 27-ஆம் திகதி (27-2-71) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 3940/-க்கு 12-10 65 தொடக்கம் 19-5-66 வரைக்கும் ரூபா 1200/-க்கு 12 வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 339-86

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பிரிவு சுண்டுகுளி கோவிற்பற்று சிவியாதெரு இறை "பாறையடி" நிலப் பரப்பு 5½-ம் வான் பயிர், வளர்பயிர்களும் கிணற்றுப் பங்கும் அதற்குச் செல்லும் பாதையும் வழி வாய்க்காலும் இதன் எல்லைகள் கிழக்கு சங்கரப்பிள்ளை சின்னத்தம்பியின் ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு ஏ. குமாரசாமி பொன்னையாவின் ஆதனம். தெற்கு ஆறுமுகம் விசுவலிங்கத்தினதும் அவரது மகன் வேலுப்பிள்ளையினதும் ஆதனம். அதடங்கலும். பதிவு செய்யப்பட்டது D 254/136.

க. சிவஸ்கந்தா
நீதி மன்ற விற்பனை
ஆணையாளரும், மதிப்பாளரும்,
நாகேந்திரமடம்
வட்டுக்கோட்டை, 21-1-71,
M 490 5-2-71.

## Commission Sale
## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில். வழக்கு இல: 10632

கெருடாவில் சுப்பிரமணியம் அருள்லிங்கம் —வழக்காளி

எதிராக

கரவெட்டி வடக்கு சிற்றம்பலம் சின்னத்தம்பி —எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1971-ம் ஞூ பங்குனி மாதம் 10-ஆம் திகதி ( 10-3-71 ) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று கரவெட்டி குறுளிக்குறிச்சியிறை வாரியத்தனை வி. பர. 8 5/8 ஷெ வீடு 1/2 ஷெ வி. பர. 3, 3/8 வாரியத்தனை கிழக்கு வாரியத்தனை ஆட்சியிலளந்துகண்ட வி. பர. 2 குளி 8 இவைகளில் வடக்குப் புறமாக முதல் மூன்று பிரிவுகளில் 1/3 பங்கும். 4ம் பிரிவில் 1/6 பங்கும் கூடிய வி. பர. 4 குளி 11, 1/3 இதுவும் இன்னும் நாலு பிரிவுகளிலும் நடுப்பெற 1/3 பங்குக்கு வி. பர. 5 குளி 2/3 இதுவும் ஒரே துண்டாயிருக்கிறது. இதற்கு ஆட்சிப்படி வி. பர 11 இதில் மேற்குப் புறமாக வி. பர 6 நீக்கி மிகுதிக்குரிய வி. பர. 5 எல்லை கிழக்கு கிட்டிணர் பெண் இலட்சுமிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு காலிங்கர் பெண் சிவபாக்கியத்துக்குரியவாதனம். தெற்கு வீரகத்தியார் பொன்னையாவுக்கும் மறுபேருக்குமுரியவாதனம். இவ்வெல்லைக்குள்ளிருக்கும் கோயில் கொட்டில்கள் பிற நீங்கலாக, கிலம், பனைகள், வேம்புகள், கிணறு, முழுவதும்.

| | |
|---|---|
| துரட்சித்தொகை: முதலும் வழக்கு வைத்த திகதி வரையுமுள்ள வட்டியும் | ரூபா 5865-00 |
| ரூபா 5000/-க்கு வட்டி 20-9-69 லிருந்து 24-3-70 வரைக்கும் 1 வருஷத்திற்கு 12% வட்டி | 300-00 |
| ரூபா 6165/-க்கு வட்டி 24-3-70 லிருந்து 24-1-71 வரைக்கும் 1 வருஷத்திற்கு 5% வட்டி | 256-00 |
| | 6421-00 |
| கோட்டுச் செலவு ரூபா | 272-10 |
| | 6693-10 |

கோட்டால் ஏற்கப்பட்ட மதிப்புத்தொகை ரூபா 7000/-

R. S. இராமநாதன்
கொம்மிசனரும், விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்

"உமாபதி"
நெல்லண்டை ரேட்டு,
பருத்தித்துறை, 30-1-71
எம். 484 5-2-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M. B. 8558

தெல்லிப்பழை மேற்கு. கந்தப்பிள்ளை சின்னத்தம்பு —வழக்காளி

எதிராக

சிறுவிளான் 1. குசைப்பிள்ளை மனுவேற்பிள்ளை
2. பெண் அன்னம்மாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8558 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1971-ம் ஆண்டு பங்குனி மீ 3-ம் திகதி (3-3-71) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 2950/-ம். 29-10-1966 தொடக்கம் 25-6-1967 வரைக்கும் ரூபா 2000/-க்கு 9 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் பணம் முற்றுக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 263-52 சதமும்.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தெருப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை 'தன்னுவ' (THUNNAI) கிலப்பரப்பு 5 செய்பயிரும், மேற்கெல்லைகாணியின் மேற்கெல்லையிலுள்ள காணியிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்கால் உரிமையும், எல்லை கிழக்கு அந்தோனிப்பிள்ளை யோசேப்பின் ஆதனமும், கயொழுங்கையும் வடக்கு ஒழுங்கை மேற்கு பஸ்ரியாம்பிள்ளை பெண் மேரி ஆனின் ஆதனம், தெற்கு அல்போன்சஸ் பெண் மேரி திரேசாவின் ஆதனம், இதடங்கலும்.

2. ஷெ இறை "கோவிந்தபுலம்" (KOVINTHAPPULAM) கிலப்பரப்பு 1 குளி 15 பனைகளும், செய்பயிரும் எல்லை கிழக்கு ஜேவியன் கந்தையா பெண் வலனியின் ஆதனம் வடக்கு மரியாம்பிள்ளை பெண் மரியைப்பிள்ளைக்கும் மற்யோருக்குமுரிய ஆதனங்கள், மேற்கு அந்தோனிப்பிள்ளை பெண் லூர்த்துக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு லூகஸேவியின்லை மனுவேற்பிள்ளையின் ஆதனம். இதடக்கலும் அத்துடன் தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்காலுரிமையும் ஐந்தக் காணக்கு வடக்கிலிருந்து வரும் ஒழுங்கையிலிருந்து வடசெல்லைக் காணியின் கிழக்கெல்லை பக்கமாக போகும் பாதையுரிமையும் ஆனல் வடக்கெல்லைகாணிக்கு இக்காணியின் கிழக்கெல்லைப் பக்கமாக தண்ணீர் இறைக்கும் வழிவாய்க்கால் உரிமை தவிர E. 168/57ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்
Commisioner of Sales, & Auctioner & Values

மல்லாகம்,
25-1-71
எம் 483 5-2-71

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 5—2—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ இல: M B 7180

திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம் K. கனகசபாபதி —வழக்காளி

எதிராக

1. நாகலிங்கம் நவரத்தினமும்
2. பெண் நாகேஸ்வரியும்
3. E. விஸ்வநாதன் கைம்பெண் சின்னத்தங்கச்சி (பின்னால் வெளிப்படுத்தப்பட்ட பகுதி) —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7180ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு மாசி மீ 10ம் திகதி ( 10-2-71) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி வட்டி ரூபாய் 8750/-ம், 13 — 5 — 65 தொடக்கம் 3-12-65 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 12/- இதில் ரூபாய் 4000/- கொடுபட்டுள்ளது.

ஆதனவிபரம்

இலங்கை, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை 'சந்திரன் தாழ்வு' நில பர. 5 குளி 16½ம் கல் வீடும், கிணறும், வான்பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு: முருகேசு சிவஞானத்திறுதனம் வடக்கு முருகேசு சிவஞானத்தினதும் வேலுப்பிள்ளை கார்த்திகேசுவினதும் ஆதனம், மேற்கு வேலுப்பிள்ளை கார்த்திகேசுவினதும் சின்னத்தம்பி சுந்தரத்தினதும் ஆதனம். தெற்கு ஒழுங்கை.

இ. சு. தர்மரத்தினம்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
46, 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
M. 489 5—2—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 10461

இளையதம்பி முத்துத்தம்பி நீர்வேலி வடக்கு நீர்வேலி —வழக்காளி

எதிராக

சின்னத்தம்பி கனகசபை புத்தூர் மேற்கு புத்தூர் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 10461-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 4 துண்டுக்காணிகள் 1971-ஆம் ஞூ பெப்ரவரி மீ 22-ஆம் திகதி (22-2-71) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 5966. பின் 1-12-68 தொடக்கம் 1-8-69 வரை ரூபா 5000/- 8 வீத வட்டியும் பின் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 339-06 சதம். இதில் ரூபா 450/- கொடுபட்டது.

ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்கிழக்கு புத்தூர் கோயிற்பற்று புத்தூர் தெற்கு "இந்தனை" பர வி. 7 கிணறும் இதற்கு எல்லை கிழக்கு சிற்றம்பலம் முத்துச்சாமியின் ஆதனம், வடக்கு திருஞானசம்பந்தர் பெண் கனகாம்பிகைக்குரிய ஆதனம், மேற்கு சிற்றம்பலம் முத்துச்சாமியின் ஆதனம். தெற்கு புதனூர் விசுவநாதசாமி கோவில் ஆதனம். பதிவு இல K. 143/44.

(2) மேற்படி புத்தூர்தெற்கு "இலந்தைப்புலம்" ப. வி. 8½ இதற்கு எல்லை கிழக்கு கந்தர் நமசிவாயத்தின் ஆதனம் வடக்கு கனகசபை முத்துக்குமாருக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். மேற்கு தாமோதரர் சரவணமுத்துவுக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு பிரசோதி பெண் சின்னுச்சிப்பிள்ளைக்குரிய ஆதனம். பதிவு இல K. 149/146.

(3) மேற்படி புத்தூர் வடக்கு 'ஆள வயல்' பர. செ. 17¾ இதற்கு எல்லை கிழக்கு சுப்பு சின்னத்தம்பியின் ஆதனம். வடக்கும், மேற்கும் வெள்ள வாய்க்கால். தெற்கு தில்லைநாதன் கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனம். பதிவு இல K. 196/181.

(4) மேற்படி புத்தூர் வடக்கு 'திருவனங்கைஓடை" ப. வி 6-ஆம் வீடுகளும் பனைகளும். இதற்கு எல்லை கிழக்கு பிரசோதி பெண் சின்னுச்சிப்பிள்ளைக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு சுப்பிரமணியம் சதாசிவத்தின் ஆதனம். மேற்கு தில்லைநாதர் மாணிக்கவாசகரின் ஆதனம். தெற்கு ஒழுங்கை. இது அடங்கலில் சொரியலாய் ½ பங்கு. பதிவு இல. K 196/182.

சி. சே மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
ஏலதாரர்.
"விதானை வளவு"
சித்தன்கேணி. 3-1-71.
M. 482 5—2—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. காசிப்பிள்ளை மாணிக்கமும்
2 மாணிக்கம் மகன் யோகேஸ்வரியும் இருவரும் உரும்பிராய் —வழக்காளி

இல: M B 10734 எதிராக

1. கதிர்காமு அப்புக்குரையும்
2. மனைவி தங்கரத்தினமும் இருவரும் உரும்பிராய்: —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 10734 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971ம் ஞூ பங்குனியீ 1-ம் திகதி (1-3-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 11551/-ம், 30-3-69 தொடக்கம் 16-2-70 வரைக்கும் ரூபாய் 8000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 408-77 இதில் ரூபாய் 200/- கோட்டுச் செலவில் கழிககவும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் வடக்கு 'கோயிற்குண்டான் கூழாங்குளி' கிலப்பரப்பு 12¼ம் மற்றும் கற்குண்டான் கூழாங்குளியும் துலுக்காமண்டையும் பன் சந்தையும் பரப்பு 11¾ம் மற்றும் கோயிற்குண்டான் கூழாங்குளி கிலப்பரப்பு 11, 1/2ம், மூன்றும் ஒன்ருகச் சேர்த்து ஒரு துண்டு கிலப்பரப்பு 35½ 196?ம் ஆண்டு புரட்டாதி மாதம் 3ம் திகதி நில அளவையாளர் K இராசையாவால் தயாரிக்கப்பட்ட பிளான் இல: 154 இல் துண்டு ஒன்று என்று குறிப்பிட்டதுமான காணி கிலப்பரப்பு 12 எல்லை கிழக்கு ஒழுங்கை; வடக்கு தம்பிப்பிள்ளை கனகரத்தினத்தின் ஆதனம். மேற்கு சங்கரசிவம் பெண் சோதிமணியின் ஆதனம். தெற்கு மேற்சொல்லப்பட்ட பிளானில் துண்டு இரண்டும் மூன்றும் இதடங்கலும் மற்றும் அதன் சொத்துரிமைகளும்

"வேல பதி"
புத்தூர்,
18 1 71

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 480 5—2—71

## கோட்டு விற்பனவு விளம்பரம

சுப்பிரமணியம் பொன்னம்பலம் காரைநகர் மேற்கு —வழக்காளி
Dr பொன்னம்பலம் பரமசுவாமி காரைநகர் மேற்கு

இல: M B 6479 எதிராக —பிரதி வழக்காளி

1. M. குழந்தைவேலு கதிரவேலுவும் 2. பெண் சிவயோகமும் இருவரும், நாவலர் ரோட்டு, யாழ்ப்பாணம்
3. மேர்க்கன்ரையில் வங்கி Ltd (யாழ்ப்பாணம்)
4. R. ஜெறிமியாவின் மகள் கமலாதேவி, வண்ணார்பண்ணை மேற்கு
5. மயில்வாகனம் இராசையாவும் 6. பெண் சின்னத்தங்கச்சியும் வண்ணார்பண்ணை மேற்கு
7. நல்லதம்பி செல்வநாயகம், சககடத்தார், யாழ்ப்பாண டிஸ்திறிக் கோடு, யாழ்ப்பாணம்.
8. சிவககொழுந்து இராசேந்திரம் 74, ஓல்ட்பார்க் ரோட், யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 6479 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஞூ பங்குனி மாதம் 17-ந் திகதி (17-3-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 40600/-ம் 10-3-64 தொடக்கம் 7-12-64 வரைக்கும் ரூபாய் 35000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைககும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 507-46 சதமும் பிரதி வழக்காளி மாற்ற ரூபாய் 113-30 சதமும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "மாவடி இலகடி சம்புநாதன் தறை" வரகுச் செய்கை கிலப்பரப்பு 3ம் 16, 1/8 குளியும் அதிலுள்ள கல்வீடும் அடுக்களையும் பயிர்களும் மேற்கெல்லைக காணியின் மேற்கெல்லையிலுள்ள கிணற்றின் அரைப்பங்கும் அதற்கு 1, 7/8 குளிகொண்ட வழிவாய்க்கால் பாயிட்புரித்தும் எல்லை கிழக்கு: செல்லம் துரையப்பாவின் ஆதனம், வடக்கு: ரோட்டு மேற்கு: முருகேசு நாகலிங்கத்தின் ஆதனம், தெற்கு: முருகேசு நாகநாதியின் ஆதனம், இது யாழ்ப்பாணம் D 287/265ன் கீழ் பதிவு செய்யப்பெற்றது.

க. சரவணமுத்து
கொமிசனர் & விலைமதிப்பாளர்

173, குருசோ வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 1-2-71
எம். 487 5-2-71

### ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ்ஆங்கிலப்பத்திரிகைகளின சந்தாதாரர்களைத் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம். —அதிபர்.